# வாக்குமூலம்
## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்,
**தேதி: 05.03.2026**
**OS. No. 23/2014**
**வழக்கு சாட்சி DW.1–மலர்விழி, க/பெ. தாமரைசெல்வன்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) நான் தற்போது திருச்செங்கோடு, CHP காலணி, வேலூர் ரோடு, நாமக்கல்லில் குடியுள்ளேன். நான் MA படித்துள்ளேன். BDO வாக பணிபுரிந்து வருகிறேன். 1ம் வாதி என்னுடைய சொத்தை அவருடையது என்று விளம்புகை செய்யக்கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். வேறு பரிகாரம் ஏதேனும் கேட்டுள்ளாரா என்றால் இல்லை. 1ம் வாதி உடல்நிலை சரியில்லாத காரணத்தால் வழக்கு குறித்து 2ம் வாதிக்கு தெரியபடுத்தி கடந்த 22.08.2019ம் தேதியில் ஒரு பொது அதிகார பத்திரம் எழுதி கொடுத்து அவரையே தொடர்ந்து நடத்துமாறு தெரிவித்து, வழக்கு 2ம் வாதி நடத்தி வருகிறார் என்றால் சரிதான். அதன் பிறகு 1ம் வாதி இறந்துவிட்டதால் 2ம் வாதி வாரிசு அடிப்படையிலும் வழக்கை தொடர்ந்து நடத்த அவருக்கு உரிமைஉள்ளது என்றால் சரியல்ல, 1ம் வாதிக்கு இரண்டு வாரிசுகள் உள்ளார்கள்.

2) 1ம் வாதியின் மற்ற வாரிசுகள் வழக்கு நடத்த முன் வராததால் அவர்களை 8 முதல் 10 பிரதிவாதிகளாக காண்பித்து வழக்கை நடத்தி வருகிறார் என்றால் எனக்கு தெரியவில்லை. வாதிகள் வழக்கில் எத்தனை பகுதிகளாக சொத்துக்களை காண்பித்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியவில்லை. 1ம் அயிட்ட சொத்தை 1ம் வாதியின் தாயார் எந்த தேதியில் கிரையம் பெற்றார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் வழக்கில் 1971 என்று சொல்லியுள்ள விவரம் எனக்கு தெரியும். வாதிகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள 1971 பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி பத்திரத்தில் தாவா 1வது அயிட்ட சொத்தை 1ம் வாதியின் தாயார் ச.எண்.534/3C என்று குறிப்பிட்டு தான் கிரையம் பெற்றுள்ளார் என்றால் அவ்வாறு சொல்லியுள்ளார்கள், ஆனால் அவர்கள் சொல்லும் சக்குபந்திகள் தவறு.

3) அதேபோல் தாவா 2 வது அயிட்ட சொத்தை 1ம் வாதியின் தாயார் 1972ல் சக்குபந்திகள் எதுவும் குறிப்பிடாமல் ச.எண்.534/3Cல் பொதுவில் 4ல் ஒரு பங்கு என்று குறிப்பிட்டு கிரையம் பெற்றுள்ளார் என்றால் அதுவும் தவறானது ஆகும். மேற்கண்ட விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றும், அந்த ஆவணங்களும் வா.சா.ஆ–1 மற்றும் வா.சா.ஆ.2 என குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், ஆனால் அது தவறானது என்று நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ச.எண்.534/3C ன் மொத்த விஸ்தீரணம் என்னவென்றால் 54 சென்ட் ஆகும். நான் சொல்வது தவறு என்றும், அதில் மொத்தம் 52 சென்ட் நிலம் தான்உள்ளது என்றால் சரியல்ல.

4) தாவா 1வது அயிட்ட சொத்தை கிரையம் பெற்றவுடன் 1ம் வாதியின் தாயாரும், 1ம் வாதியும் கிணறு வெட்டியுள்ளார்கள் என்றும், அது தொடர்பாக புகைபடங்கள் மற்றும் CD ஆகியவற்றை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அது பொய்யான ஆவணம் ஆகும். என் மாமியார் தான் கிணறு வெட்டினார். ச.எண்.534/3Cல் என் மாமியார் ஒரு சிறு பகுதியை கூட கிரையம் பெறவில்லை என்றும், அதில் அவர் கிணறு வெட்டியதாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல, 1969 லேயே என் மாமியார் மாதம்மாள் 36–3/4 சென்ட் நிலத்தை கிரையம் பெற்றுள்ளார். 1ம் வாதிக்கும், அவரது தாயாருக்கும் கல்வி அறிவு இல்லை என்றும், என் மாமியார் மற்றும் மாமனாரிடம் அவர்களிடம் மின் இணைப்பு பெற்றுதருமாறு தெரிவித்ததன் பேரில் அவர்கள் தவறுதலாக எந்த ஆவணமும் கொடுக்காமல் ச.எண்.534/3Cல் 52 சென்ட் நிலத்திற்கும், எங்களுக்கு சொந்தமான ச.எண்.534/4ல் உள்ள 1.26 ஏக்கர் என சேர்த்து 1.42 ஏக்கர் நிலம் எங்களுக்கு பாத்தியப்பட்டவாறு இலவச மின்சாரம் பெறுவதற்கு தகுதியானவர்கள் என்று மேட்டூர் வட்டாட்சியரிடம் தகுதி சான்றிதழ் பெற்றுள்ளார்கள் என்றால் சரியல்ல. (மேற்கண்ட கேள்வி குறித்து வழக்கில் எவ்வித சங்கதிகளும் குறிப்பிடவில்லை என்று 1, 2, 3 பிரதிவாதிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. வாதிகள் தரப்பில் மேற்கண்ட கேள்விக்கு ஆதரவாக 1, 2, 3 பிரதிவாதிகளே ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது).

5) மேற்கண்டவாறு தவறுதலாக பெற்ற ஆவணத்தை தான் பி.வா.சா.ஆ–9 ஆக தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல, முறைபடி தான் பெற்றுள்ள ஆவணம் ஆகும். ச.எண்.534/3C ல் என் மாமியார் எந்த தேதியில் எவ்வளவு நிலம் விலைக்கு வாங்கினார் என்பதற்கு ஆதரவாக ஆவணமோ, அந்த ஆவணத்தின் அடிப்படையில் எங்களுக்கு இவ்வளவு நிலம் பாத்தியப்பட்டது என்று எங்கள் பதிலுரையிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளோமா என்றால் சொல்லியுள்ளோம், பதிவு செய்யப்பட்ட ஆவணமும் தாக்கல் செய்துள்ளோம். அந்த ஆவணம் எந்த தேதியில் பதிவு செய்யப்பட்டது என்றால் எனக்கு நினைவில்லை.எந்த வருடத்தில் கிரையம் பெறப்பட்டது என்றால் 1969 ல் கிரையம் பெறப்பட்டது. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.7 ஆவணம் தான் என் மாமியார் கிரையம் பெற்றதாக நான் சொல்லும் ஆவணமா என்றால் ஆமாம்.

6) மேற்படி ஆவணத்தில் ச.எண்.534/3C ல் எவ்வளவுநிலம் வாங்கப்பட்டது என்று குறிப்பிடப்பட்டதா என்றால் மேற்கண்ட ஆவணத்தில் கிரையம் பெற்ற பிறகு தான் ச.எண்.534/3C என உட்பிரிவு செய்யப்பட்டது. நாங்கள் உட்பிரிவு செய்யப்பட்டதாக சொல்வது தவறு என்றும், அதற்கு ஆதரவாக ஆவணங்கள் எதுவும் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றும், ஆரம்பத்திலிருந்தே 52 சென்ட்நிலம் முழுவதுமே எங்களுக்கு பாத்தியப்பட்டது என ஆவணங்கள் தயார் செய்து வந்துள்ளோம் என்றால் சரியல்ல. என் மாமியார் இலவச மின்சாரம் கோரி கொடுத்த மனுவுடன் என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்தார்கள் என்ற விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எந்தெந்த ஆவணங்கள் ஒப்படைத்தார்கள் என்ற சங்கதிகளும் எங்கள் பதிலுரையிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றும், என் மாமியாரின் செல்வாக்கை பயன்படுத்தி, வாதிகளின் கல்வியறிவின்மையை பயன்படுத்தி எங்களிடம் உதவி கேட்ட ஒரே காரணத்திற்காக உரிமையில்லாத ஒரு சொத்திற்கு தகுதியானவர்கள் என்று என் மாமியார் பொய்யாக சான்று பெற்றுள்ளார் என்றால் சரியல்ல, எங்கள் ஊரில் அனைவருக்கும் என் மாமியார் தான் கிணறு வெட்டினார் என்ற விவரம் தெரியும்.

7) அந்த சான்றின் அடிப்படையில் மின் இணைப்பு வழங்குவதற்காக 28.03.1958ம் தேதியில் என் மாமியாருக்கு கொடுத்த ஆவணமான பி.வா.சா.ஆ.10ம் வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. அதன் பிறகு பி.வா.சா.ஆ.11ன் அடிப்படையில் என் பெயருக்கு மின் இணைப்பு மாற்றப்பட்டதும் தவறு என்றால் சரியல்ல. 4 முதல் 7 பிரதிவாதிகளான அரசு அதிகாரிகள் என் மாமியார் கொடுத்த மனுவினை சரியாக பரிசீலனை செய்யாமல் தவறான மின் இணைப்பு கொடுத்ததால் தான் அவர்களையும் வழக்கில் சேர்த்து அவர் பெயரில் வழங்கியதை ரத்து செய்யுமாறு வாதிகள் பரிகாரம் கோரியுள்ளார்கள் என்றால் அதுவும் தவறானது ஆகும். இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையாளர் நியமனம் செய்யப்பட்டு, அவர் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அவர் தனது அறிக்கையில் தாவா 1வது அயிட்ட சொத்திலுள்ள சக்குபந்திக்குள் தான் கிணறு உள்ளதாக தெரிவித்துள்ளார் என்றால் சரிதான், கிணறு எங்கள் நிலத்தில் உள்ளது. கிணறு எங்கள் நிலத்தில் இல்லை என்றும், 1ம் வாதியின் தாயார் கிரையம் பெற்ற சொத்தில் தான் கிணறு உள்ளது என்றால் சரியல்ல.

8) நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கையில் எங்கள் தரப்பில் பி.வா.சா.ஆ.7 ஆவணத்தின் அடிப்படையில் அளந்து கொடுக்குமாறு நாங்கள் கேட்டதாகவும், ஆனால் அந்த ஆவணத்தில் சக்குபந்திகள் எதுவும் குறிப்பிடாததால் அளக்க இயலாது என்று தெரிவித்ததாகவும் அறிக்கையில் தெரிவித்துள்ளார் என்றால் சரியல்ல. அ.வ.எண்.215/1998 என்ற வழக்கு என் மாமனாரின் உறவினர்களான கலா (எ) கலையரசி மற்றும் ராணி ஆகிய இருவரும் என் மீதும், என் மகன்களான 2, 3 பிரதிவாதிகள் மீதும் தாக்கல் செய்தனர். அ.வ.எண்.225/1998 என்ற வழக்கை நான் மேறகண்ட கலா (எ) கலையரசி மற்றும் ராணி ஆகியோர்கள் மீது தாக்கல் செய்தேன். மேற்கண்ட இரண்டு வழக்குகளிலும் காட்டப்பட்ட சொத்துக்களும் ஒரே சொத்துக்களா என்றால் ஆமாம். மேற்கண்ட இரண்டு வழக்குகளிலும் ச.எண்.534/3C ல் 0.21.00 ஏர்ஸ் (52 சென்ட்) என சொத்து விவரம் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கில் 52 சென்ட் நிலம் எங்களுக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு என்ன ஆவணம் தாக்கல் செய்தோம் என்றால் என் மாமனார் எங்களிடம் கொடுத்த பத்திர பதிவு

ஆவணங்கள் மற்றும வருவாய் ஆவணங்கள் வைத்து வழக்கு தாக்கல் செய்தோம். இரு வழக்குகளுமே எங்களுக்கு ஆதரவாக தீர்ப்பானது. மேற்கண்ட இரண்டு வழக்குகளையும் எதிர்த்து எதிர் தரப்பினர் மேல்முறையீடு தாக்கல் செய்தார்கள் அதுவும் எங்களுக்கு ஆதரவாகத்தான் தீர்ப்பானது.

9) மேற்கண்ட அசல் வழக்குகள் மற்றும் மேல்முறையீட்டு வழக்குகளுக்குண்டான தீர்புரையை நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றும், அதன் தீர்ப்பாணையை மட்டும் தான்தாக்கல் செய்தோம் என்றால் எனக்கு தெரியவில்லை, வேண்டுமென்றால் சமர்ப்பிக்க தயாராக உள்ளேன். அந்த தீர்ப்புரையை தாக்கல் செய்திருந்தால் அந்த 52 சென்ட் நிலம் குறித்து நாங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ஆவணங்கள் குறித்தும் அது தொடர்பாக நீதிமன்றம் முடிவுக்ககு வந்த சங்கதிகள் குறித்தும் தெரிந்துவிடும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்கண்ட 4 வழக்குகளிலும் வாதிகள் தரப்பினர்கள் இல்லை என்றும், நானும் என் உறவினர்களும் 52 சென்ட் நிலத்தை காண்பித்து வாதிகளுக்கே தெரியாமல் வழக்கு தாக்கல் செய்து, பெற்ற தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையானது வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல, எங்கள் ஊரிலுள்ள அனைவருக்கும் வழக்கு நடந்த விவரங்கள் தெரியும், வாதிகளுக்கும் தெரியும். மேற்கண்ட 4 தீர்ப்பாணைகளும் இந்த வழக்கில் கருத்துக்கு எடுத்துக்கொள்ள இயலாது என்றும், பாதிப்பு ஏற்படுத்தாது என்றால் சரியல்ல. 1ம் வாதியின் தாயார் தங்கம்மாள் உயிருடன் இருக்கும்போது அவருக்கு பாத்தியப்பட்ட 3 சர்வே எண்ணான 534/3C, 534/2, 551/15 ல் கண்ட சொத்தை மட்டும் தன்னுடைய மகன்களான ராஜா, நல்லதம்பி, 1ம் வாதி கண்ணுபையனுக்கு வாய்மொழியாக வழங்கப்பட்டுள்ளது என்றும், அதற்கு பின்னிட்டு தான் 07.12.1992 ல் தங்கம்மாளுக்கும், அவரது கணவருக்கும் பாத்தியப்பட்ட குடும்ப சொத்துக்களை பாகபிரிவினை பத்திரமாக எழுதி கொண்டார்கள் என்றும், அதனால் தான் அந்த பாகபிரிவினை பத்திரத்தில் மேற்கண்ட மூன்று சர்வே எண்கள் குறித்து குறிப்பிடவில்லை என்றும், அதை தான் நாங்கள் பி.வா.சா.ஆ.16 ஆக நாங்கள் தாக்கல் செய்துள்ளோம் என்றும், அந்த ஆவணத்தை பயன்படுத்தி தாவா சொத்துக்கள் வாதிகளின் குடும்பத்திற்கு வழங்கப்படவில்லை என்று வழக்காடுவது தவறு என்றால் சரியல்ல. வாதிகள் தாவாவில் சொத்துக்கள் வாய்மொழி பாகபிரிவினை மூலம்

பாத்தியப்பட்டதாக தெளிவாக சொல்லியுள்ளார்கள் என்றால் சரியல்ல, அது என் மாமியார் சொத்தாகும்.

10) ச.எண்.534/3C என்பது ஆரம்பத்தில் ச.எண்.534/3 என இருந்ததா என்றால் பழைய சர்வே எண் எனக்கு தெரியவில்லை. ச.எண்.534/3C உட்பிரிவு செய்வதற்கு முன்பு எவ்வளவு நிலம் இருந்தது என்றால் மொத்த நிலம் தெரியவில்லை, எங்களுக்கு ச.எண்.534/3C ல் 36–3/4 செண்ட் நிலம் உள்ளது. எங்கள் ஆவணத்திலேயே ச.எண்.534/3 ல் மொத்த அளவு 2.18 ஏக்கர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், நான் வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ச.எண்.534/3 ஆனது ஆரம்பத்தில் யாருக்கு பாத்தியப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. அந்த சொத்தானது ஆண்டியப்ப கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்றால் பழைய ஆவணங்கள் குறித்து எனக்கு தெரியவில்லை. அந்த சொத்தானது ஆண்டியப்ப கவுண்டருக்கு பாத்தியப்பட்டு அவரது இரண்டு மகன்கள் நடராஜன் மற்றும் சுந்தரர்ராஜன் ஆகிய இருவருக்கும் வாய்மொழியாக 1.9 ஏக்கர் பிரிக்கப்பட்டது என்றால் அது வாதிகள் வழக்கிற்காக கூட தெரிவித்திருக்கலாம். மேற்கண்ட நடராஜன் மகன் சாம்பசிவம் என்பவரிடம்இருந்து தான் அவரது குடும்பத்திற்கு பாகமாக பிரிக்கப்பட்ட சொத்தில் 3 ல் 1 பங்கு என்று குறிப்பிட்டு 1969 ல் என் மாமியார் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு 2025 ம் தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.